தேதி.04.03.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No. 5/2015 திரு. K.R.பழனிச்சாமி த./பெ ராமசாமி வா.சா.2

<u>வா.சா.2: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:</u>

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். வாதியையும், 1ம் பிரதிவாதியையும் எனக்கு தெரியும் கேர்மாளத்தில் விவசாயம் செய்து வருவதால் எனக்கு அவர்களை தெரியும். அது தவிர வாகனம் வைத்து ஓட்டி வந்தேன். 1998 ஆம் வருடம் சுரேஷ் என்பவருக்கு சாராதாம்மாள் விவசாயம் நிலத்தை வாங்குவதற்காக ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அதன்பின்னிட்டு 2015 ஆம் வருடம் வாதியும் 1ம் பிரதிவாதியும் மேற்படி விவசாயம் நிலத்தை வாங்குவதற்காக ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். சுரேஷ் என்பவர் ஒப்பந்தபடி நடக்காததால் மேற்படி நிலத்தை விற்பதற்கு வாதியும் 1ம் பிரதிவாதியும் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்தம் தயார் செய்யும் போது அங்கு வாதி 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் கிரிகவுடர் ஆகியோர் இருந்தோம். என்னிடம் எதற்காக ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டது என்ற விபரங்களை தெரிவித்த பின்னர் வாதியும் 1ம் பிரதிவாதியும் கையெழுத்திட்ட பின்னர் நான் சாட்சியாக கையெழுத்திட்டேன். மேற்படி ஒப்பந்த பத்திரம் 1ம் பிரதிவாதியின் வீட்டில் வைத்து தயார் செய்யப்பட்டது. சாரதம்மாளும் வழக்கறிஞரும் ஒரே சமூகம் என்பதால் அவருக்கு பழக்கம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் கிரய ஒப்பந்தத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான் அது **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாரதாம்மாள் மற்றும் ராமசாமி எனது முன்னிலையில் கையெழுத்து செய்தனர்.

பிரதிவாதி வழக்குரைஞர் வேண்டுகோளுகிணங்க குறுக்க விசாரணைக்காக வழக்கு தள்ளிவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.